# மாணவச் செல்வங்களின் வெற்றிதான் நம் முதலமைச்சரின் வெற்றி!

## கோவையில் 1,800 பேருக்கு பணி நியமன ஆணைகளை வழங்கி, அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு!




கோயம்புத்தூர் மாவட்டம் கொடிசியா அரங்கத்தில், நேற்று (29.02.2024) நான் முதல்வன் திட்டம் மூலம் கல்லூரிக் கனவு – 2024 திட்டத்தினை வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் சு.முத்துசாமி, பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் முன்னிலையில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்து மாணவ மாணவியர்களுக்கு கையேட்டினை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை அரசு செயலாளர் டாக்டர்.தாரேஸ் அகமது, தமிழ்நாடு திறன்மேம்பாட்டு கழக மேலாண்மை இயக்குநர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா, மாவட்ட ஆட்சித்தலைவர் கிராந்தி குமார் பாடி, நாடாளுமன்ற உறுப்பினர் கு.சண்முகசுந்தரம், மாநகராட்சி மேயர் திருமதி.கல்பனா ஆனந்தகுமார், மாநகராட்சி ஆணையாளர் மா.சிவகுருபிரபாகரன், மாவட்ட வருவாய் அலுவலர் டாக்டர்.மோ. ஷர்மிளா, மாநகராட்சி துணை மேயர் ரா.வெற்றிசெல்வன் ஆகியோர் உள்ளனர்.

**கோவை, மார்ச். 1-**

**கோவையில் `பள்ளி மாணவர்களுக்கான கல்லூரிக் கனவு 2024' நிகழ்ச்சியை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.**

**அப்போது, `நான் முதல்வன்' திட்டத்தின் கீழ், கோவை மாவட்டத்தைச் சேர்ந்த 1,800 பேருக்கு பணி நியமன கடிதங்களை வழங்கி மாணவர்கள் மத்தியில் எழுச்சிமிகு உரையாற்றினார்.**

அப்போது அவர் பேசியதாவது:

முதலமைச்சரின் கனவுத் திட்டமான `நான் முதல்வன்' திட்டத்தின் கீழ் 1,800 மாணவர்களுக்கு வேலைவாய்ப்புக்கான பணி நியமனக் கடிதங்களை வழங்குவது மற்றும் பள்ளி மாணவர்களுக்கு உயர் கல்விக்கு வழிகாட்டுகிற கல்லூரிக் கனவு 2024 முன்னெடுப்பைத் தொடங்கி வைப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

குறிப்பாக, நம் கோவை மாவட்ட இளைஞர்கள், மாணவ, மாணவிகளை இந்த நிகழ்ச்சியின் மூலம் சந்திப்பதில் எனக்குக் கூடுதல் மகிழ்ச்சி. தமிழ்நாட்டில் சுதந்திரம் அடைந்து இத்தனை வருடத்தில் கடந்த மூன்று தலைமுறைக்கு முன்னால்தான் அதிக அளவில் பள்ளிக்கூடங்கள் தொடங்கப்பட்டன. இரண்டு தலைமுறைக்கு முன்புதான் கல்லூரிகள் அதிக அளவில் தொடங்கப்பட்டன.

தொழிற்சாலைகள் அதிகமாக வந்தது, போன தலைமுறையில்தான். இப்படி தமிழ்நாட்டின் முன்னேற்றத்தைப் படிப்படியாக வளர்த்தெடுத்தவர் நம் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள். கலைஞரின் ஆட்சியில்தான் மூன்று கிலோ மீட்டருக்கு ஒரு பள்ளிக்கூடம் இருக்கவேண்டும் என்ற திட்டத்தை அறிவித்தார்.

### கலைஞர்தான் நுழைவுத்தேர்வை ரத்து செய்தார்!

கலை அறிவியல் கல்லூரிகள் தமிழ்நாடெங்கும் அதிகளவு திறக்கப்பட்டன என்றால், கலைஞரின் ஆட்சியில்தான். கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைத் தாண்டி, இன்றைக்குப் பொறியியல் கல்லூரிகள் அதிகமாகத் திறக்கப்பட்டி ருக்கின்றன என்றால், அதுவும் டாக்டர் கலைஞரின் ஆட்சியில்தான்.

ஏழை, எளிய வீட்டுப் பிள்ளைகள் இன்ஜினீயரிங் படிக்க வேண்டும் என்று நுழைவுத் தேர்வை ரத்து செய்தார். அதற்கு அடுத்த கட்டமாக தொழிற்சாலைகள் அதிகமாக உருவாகியது என்றால், அதுவும் கலைஞரின் ஆட்சிக் காலத்தில்தான். இந்த கோவை இவ்வளவு பெரிய தொழில் நகரமாக இருக்கிறது என்றால், அதற்கு டாக்டர் கலைஞரின் பங்களிப்பு மிக மிக முக்கியமானது.

கலைஞர் வழியில் வந்த நம் முதலமைச்சர் அவர்கள் கல்விக்கு அடுத்தபடியாக திறன் மேம்பாட்டுக்காகவும், புதிய தொழில் முனைவோர்களை உருவாக்குவதற்காகவும்தான் ‘நான் முதல்வன்’ திட்டத்தை அறிவித்தார்கள்.

தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய ஒவ்வொரு மாணவனும் அவர்களின் துறையில் முதல்வனாக இருக்கவேண்டும் என்று தொடங்கப்பட்ட திட்டம்தான், இந்த நான் முதல்வன் திட்டம்.

### மூன்று வாரங்களில் 4–வது `நான் முதல்வன்' நிகழ்ச்சி

கடந்த மூன்று வாரங்களில் மட்டும் நான் கலந்து கொள்கிற நான்காவது `நான் முதல்வன்' நிகழ்ச்சி இந்த நிகழ்ச்சி. அந்த அளவுக்கு இந்தத் திட்டத்தின் கீழே தினம், தினம் ஏதாவது ஒரு புதிய முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதற்காக சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை மற்றும் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்துக்கு என்னுடைய வாழ்த்துகளையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

2022-ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட ‘நான் முதல்வன்’ திட்டத்தின் கீழ் இன்றைக்குக் கிட்டத்தட்ட 28 லட்சம் மாணவ மாணவிகள் பயனடைந்து இருக்கிறார்கள். பொறியியல் கல்லூரிகளில் மட்டும் செயல்படுத்தப்பட்டு வந்த ‘நான் முதல்வன்’ திட்டம் இன்றைக்குக் கலை, அறிவியல் கல்லூரிகள் பாலிடெக்னிக் கல்லூரிகள், அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் போன்ற இடங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

கல்லூரிகளில் மட்டும் இல்லை, இன்றைக்குப் பள்ளிகளிலும் ‘நான் முதல்வன்’ திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாகத்தான் கல்லூரியில் என்ன படிக்கலாம், என்று வழிகாட்டும் வகையில் கல்லூரிக் கனவு 2024 நிகழ்ச்சியை இங்கே தொடங்கி வைத்திருக்கிறோம்.

### கற்றல் திறனுக்கேற்ற பயிற்சிகள்!

அரசுப் பள்ளி மாணவர்களின் கற்றல் திறன் மற்றும் அறிவாற்றலைக் கண்டுபிடித்து அதற்கு ஏற்றாற்போல் பயிற்சிகளை வழங்க, ‘நான் முதல்வன் ஒலிம்பியாட்’ என்ற திட்டத்தைக் கடந்த வாரம் தொடங்கி வைத்தோம்.

இன்றைக்குக் கிட்டத்தட்ட 1,800 பேருக்கு வேலைவாய்ப்புக்கான பணி நியமனக் கடிதங்களை இன்றைக்குக் கொடுக்க இருக்கிறோம். இதன் மூலமாக சுமார் ஒவ்வொருவருக்கும் இரண்டு லட்சம் ரூபாயில் தொடங்கி 20 லட்சம் ரூபாய் வரை ஆண்டு வருமானத்தில் வேலைக்குச் சேர இருக்கிறீர்கள். 1,800 பேருக்குப் பணி நியமானக் கடிதங்களைக் கொடுக்கிறோம் என்றால், 1,800 குடும்பங்களுக்கு இன்றைக்கு நம் முதலமைச்சர் அவர்கள் ஒளி ஏற்றி வைத்திருக்கிறார்கள் என்று அர்த்தம்.

இது வெறும் பணி நியமனக் கடிதம் மட்டுமல்ல. உங்களுடைய தலைமுறையை அடுத்தடுத்து எடுத்துச் செல்வதற்கான துருப்புச் சீட்டு. ‘நான் முதல்வன்’ திட்டத்தின் மூலம் கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் கிட்டத்தட்ட 1 லட்சத்து 19 ஆயிரம் மாணவர்களுக்கு இந்தத் திட்டத்தின் மூலம் வேலைவாய்ப்பு கிடைத்திருக்கிறது. இதில் என்ன சிறப்பு என்றால், இதில் 98 சதவிகிதம் பேர் முதல் தலைமுறைப் பட்டதாரிகள்.

ஆட்டோ ஓட்டுநர், காய்கறி வியாபாரம் செய்கிறவர், மில் வேலைக்குச் செல்பவர், விவசாயக் கூலிகள் அகியோரின் வீட்டுப் பிள்ளைகள் ‘நான் முதல்வன்’ திட்டம் மூலமாக இன்றைக்கு மாதம் ரூபாய் 20 ஆயிரத்திலிருந்து இரண்டு லட்சம் வரைக்கும் சம்பளத்தில் வேலைக்குச் சேர்ந்திருக்கிறார்கள். சில உதாரணங்களை இங்கே கூற விரும்புகிறேன்.

### வேளச்சேரியைச் சேர்ந்த மாணவி ரேவதி!

சென்னை வேளச்சேரியைச் சேர்ந்தவர் சகோதரி மாணவி ரேவதி. அவருடைய தந்தை ஆட்டோ ஓட்டுநராக இருக்கிறார். அம்மா அந்தப் பகுதியில் காய்கறி வியாபாரம் செய்பவர். இப்படிப்பட்ட ஒரு பின்புலத்திலிருந்து வந்திருக்கக்கூடிய அந்த மாணவி, பி.காம் படித்துக் கொண்டிருக்கும் போது ‘நான் முதல்வன்’ திட்டத்தின் கீழ் Business Analytics என்ற வகுப்பைப் படித்தார்கள்.

பிறகு ‘நான் முதல்வன்’ வேலை வாய்ப்பு முகாமில் கலந்துகொண்டார். ‘நான் முதல்வன்’ அளித்த பயிற்சி, அவரை நேர்காணலில் வெற்றிப் பெறவைத்து, தேர்வு செய்ய வைத்தது. இன்றைக்கு Solution Outsourcing என்ற நிறுவனத்தில் ஆண்டுக்கு ரூபாய் 3 லட்சம் ஊதிய சம்பளத்தில் அவருக்குக்கு வேலை கிடைத்திருக்கிறது.

இன்றைக்கு ‘நான் முதல்வன்’ திட்டத்தினால் ரேவதி அவர்களின் குடும்பம் மகிழ்ச்சியாக இருக்கிறது.

அதேபோல இங்கு பக்கத்தில் இருக்கிற திருப்பூரைச் சேர்ந்த சகோதரி அனுஸ்ரீ அவர்களின் அப்பா ஒரு டெய்லர். பி.எஸ்சி கம்ப்யூட்டர் சயின்ஸ் படிக்கிற அனுஸ்ரீ ‘நான் முதல்வன்’ திட்டத்தின் மூலமாக Cloud Computing படித்தார். ‘நான் முதல்வன்’ வேலைவாய்ப்பிலும் அவர் கலந்து கொண்டார். இன்றைக்குத் தங்கை அனுஸ்ரீ AVA Soft என்ற நிறுவனத்தில் வருடத்துக்கு ரூபாய் 5 லட்சம் சம்பளத்தில் வேலைக்குச் சேர்ந்திருக்கிறார்கள்.

### வருமானத்துக்குக் கஷ்டப்பட்டகுடும்பம்!

வருமானத்துக்குக் கஷ்டப்பட்ட அவர் குடும்பம் அடுத்த ஓரிரு ஆண்டுகளில் வருமான வரி கட்டப் போகிற குடும்பமாக மாறப் போகிறது. இதுதான் ‘நான் முதல்வன்’ திட்டத்தின் சாதனை, பெருமை. திருவள்ளூர் மாவட்டத்தில் கெங்கலு கண்டிகை என்று ஒரு கிராமம் இருக்கிறது. ஆந்திர எல்லையைச் சேர்ந்த ஒரு கிராமம். அங்கு அண்ணன் தம்பிகள் பிரேம் குமார், சசிகுமார் என்று இரண்டு பேர்.

12 ஆம் வகுப்பில் கொஞ்சம் குறைவான மதிப்பெண்கள் எடுத்துவிட்டார்கள். அதனால், கல்லூரியில் சேர முடியாத நிலை. அவர்களை ‘நான் முதல்வன்’ திட்டத்தின் மூலமாகக் கண்டுபிடித்து உயர் கல்விக்கான வழிகாட்டுதல் வழங்கப்பட்டது.

இன்றைக்கு அவர்கள் இரண்டு பேருமே பாலிடெக்னிக் கல்லூரியில் சேர்ந்து படித்துக் கொண்டு இருக்கிறார்கள். அவர்களுடைய வேலைக்கான திறன் பயிற்சியும் ‘நான் முதல்வன்’ திட்டத்தின் மூலம் நம் அரசு கொடுத்துக் கொண்டு இருக்கிறது.

விரைவில், அவர்கள் இரண்டு பேருமே வேலைக்குச் சேரப் போகிறார்கள். இப்படி லட்சக்கணக்கான ரேவதிகள், அனுஸ்ரீக்கள், சசிகுமார்கள், பிரேம்குமார்கள் வாழ்வில் ‘நான் முதல்வன்’ திட்டம் ஒளி ஏற்றி வைத்திருக்கிறது என்பதை இங்கு நான் பெருமையோடு கூறிக் கொள்கிறேன்.

உங்களுக்கு வேலை வாய்ப்பை நம் அரசு பெற்றுக் கொடுத்திருக்கிறது. இந்த வேலை வாய்ப்பை நீங்கள் பெற்றிருக்கிறீர்கள் என்றால் அடுத்த பத்து ஆண்டுகளில் குறைந்தது நீங்கள் இன்னொரு 100 பேருக்கு வேலைவாய்ப்பை உருவாக்கித் தருகின்ற திறமையை நீங்கள் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அதற்காகத்தான் இன்றைக்கு ‘நான் முதல்வன் மென்டார்சிப் போர்ட்டல்’ என்ற திட்டத்தை இங்கே தொடங்கி வைத்திருக்கிறோம்.

தொழில் துறையிலும், வெளிநாடுகளிலும் பல்வேறு நிறுவனங்களில் தமிழ்நாட்டைச் சேர்ந்த பலர் முக்கியப் பொறுப்பில் இருக்கிறார்கள். அவர்களின் திறமையும் அனுபவத்தையும் நம் மாணவர்களுக்குப் பகிர்வதற்கான ஒரு தளம்தான் நம் ‘நான் முதல்வன் மென்டார்சிப் புரோகிராம்’.

### சின்னப் பொறி கிடைத்தால் போதும்!

நம் மாணவர்களைப் பொறுத்த வரைக்கும் ஒரு சின்னப் பொறி கிடைத்தால் போதும். அதைப் பிடித்துக்கொண்டு அவர்கள் மேலே வந்துவிடுவார்கள்.

அந்த அளவுக்குத் திறமையான வர்கள்தான் தமிழ்நாட்டு மாணவர்கள். எனவே சரியான வழிகாட்டல்களைக் கொடுத்தால் நிச்சயம் வெற்றி பெறுவார்கள் என்றுதான் இந்த ‘நான் முதல்வன் மென்டார்சிப் போர்ட்டலை’ இன்றைக்குத் தொடங்கி இருக்கிறோம். இதனைப் பயன்படுத்தி வாழ்வில் சிறக்க மாணவர்களை நான் வாழ்த்துகிறேன்.

பொறியியல் படித்தால்தான் வேலை கிடைக்கும் என்ற ஒரு சிந்தனை முன்பெல்லாம் இருந்தது. அதனை உடைத்து இன்றைக்கு என்ன படிப்பு படித்தாலும், உரிய திறன் இருந்தால் வேலைக்குப் போகலாம் என்று நம் ‘நான் முதல்வன்’ திட்டம் சாதித்துக் காட்டியிருக்கிறது.

இந்த கோவை மாவட்டத்தில் மட்டும் நடைபெற்ற கலை, அறிவியல் கல்லூரிகளாக வேலை வாய்ப்பு முகாம்களில் 1,500 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிறார்கள்.

கோவை மாவட்டத்தில் அண்ணா பல்கலைக்கழகத்துடன் இணைந்து நடைபெற்ற பொறியியல் கல்லூரி கேம்பஸ் இன்டர்வியூவில் 1,607 மாணவர்கள் வேலை வாய்ப்புப் பெற்று இருக்கிறார்கள். தனியார் துறை மட்டுமின்றி ஒன்றிய அரசுப் பணிகளுக்குத் தயாராகும் மாணவர்களுக்கும் நம் அரசு, ‘நான் முதல்வன்’ திட்டத்தின்கீழ் பயிற்சியைத் தருகின்றது.

இதன் மூலம் பயிற்சிபெறும் இளைஞர்களுக்கு மாதம் 7,500 ரூபாய் ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது. முதல்நிலைத் தேர்வில் வெல்லும் மாணவர்களுக்கு ஊக்கத்தொகையாக 25 ஆயிரம் ரூபாயை நம் அரசு அளிக்கிறது. கோவையில் உள்ள இலங்கைத் தமிழர் முகாம்களில் வசிக்கிறவர்களுக்குப் பெயிண்டிங், தையல் பயிற்சி, கட்டுமானத்திறன் உள்ளிட்ட சிறப்புத் திறன் பயிற்சிகளை இன்றைக்குத் தொடங்கி வைக்கிறோம்.

‘நான் முதல்வன் ஒலிப்பியாட்’, உயர் கல்விக்கு வழிகாட்டும் கல்லூரிக் கனவு, ‘நான் முதல்வன்’ வழிகாட்டுதல் தளம், இளைஞர்களுடைய திறனை உலகறியச் செய்யும் தமிழ்நாடு திறன் போட்டிகள், அரசுப் பணி இலக்கை நிறைவேற்றும் போட்டித் தேர்வுகள் என்று உங்களுடைய கனவுகளை நனவாக்கத்தான் ‘நான் முதல்வன்’ திட்டம் இருக்கிறது. இளைஞர்களாகிய நீங்கள் வென்றால்தான் தமிழ்நாடு வெற்றி பெறும் என்பதை நீங்கள் உணர்ந்துகொள்ள வேண்டும்.

நாளைக்கு 12 ஆம் வகுப்புப் பொதுத் தேர்வு ஆரம்பிக்க இருக்கிறது. நம்முடைய பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் இங்கு பேசும்போது வந்திருக்கக்கூடிய 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கெல்லாம் அவருடைய வாழ்த்தைச் சொன்னார். நானும் என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேசமயம் இங்கு நிறைய ஆசிரியர்கள் வந்திருக்கிறீர்கள். மாணவர்கள் வந்திருக்கிறீர்கள். ஆசிரியர்களுக்கு நான் எப்போதுமே வைக்கிற வேண்டுகோள் ஒன்றே ஒன்றுதான். விளையாட்டு வகுப்பைக் கடன் வாங்கி, உங்களுடைய அறிவியல் வகுப்பு, கணக்கு வகுப்புப் பாடங்களை நடத்துகிறீர்கள். தயவு செய்து அதைத் தவிர்த்துவிட்டு, மாணவர்களுக்கு விளையாடுவதற்கான நேரத்தையும் ஒதுக்கிக் கொடுங்கள்.

### உங்களுடைய வெற்றி தான் முதலமைச்சரின் வெற்றி!

தமிழ்நாட்டு மாணவச் செல்வங்கள் இப்போது பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொண்டு பல்வேறு சாதனைகளைச் செய்துக்கொண்டு வருகிறார்கள். எந்த அளவுக்குப் படிப்பு முக்கியமோ, அதே அளவுக்கு விளையாட்டும் மிக மிக முக்கியம் என்று கூறிக்கொண்டு, வந்திருக்கக்கூடிய மாணவச் செல்வங்கள் உங்கள் அத்தனைப் பேருக்கும் என் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அரசின் திட்டங்கள் மூலம் பயன் பெற்றிருக்கக்கூடிய நீங்கள் அத்தனை பேரும் இந்த அரசின் தூதுவர்கள். உங்களுடைய வெற்றி இந்த அரசின் வெற்றி. உங்களுடைய வெற்றிதான் நம் முதலமைச்சர் அவர்களின் வெற்றி என்பதைத் தெரிவித்துக்கொண்டு, நம் முதலமைச்சர் அவர்கள் எப்பொழுதுமே உங்களுக்குத் துணை நிற்பார்கள். நானும் உங்களோடு தோளோடு தோள் கொடுப்பேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் அமைச்சர்கள் முத்துசாமி, அன்பில் மகேஷ் பொய்யாமொழி, பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் சண்முகசுந்தரம், கோவை மாநகர மேயர் கல்பனா ஆனந்தகுமார், சிறப்புத்திட்ட செயலாக்கத் துறை அரசு செயலாளர் மருத்துவர் தாரேஸ் அகமது, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் இன்னொசென்ட் திவ்யா, மாவட்ட ஆட்சியர் கிராந்தி குமார், கோவை மாநகராட்சியின் ஆணையர் சிவகுரு, கோவை மாநகராட்சியின் துணை மேயர் வெற்றிச்செல்வன், ஈரோடு பிரகாஷ், ராஜீவ்காந்தி உட்பட மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.